வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 22.04.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 113 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# திருத்தந்தை பிரான்சிஸ் நேற்று 88 ஆவது வயதில் காலமானார்



வத்திக்கான் சிற்றி, ஏப்ரல் 22


திருத்தந்தை பிரான்சிஸ் தனது 88ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை காலமானார் என்று வத்திக்கான் கமெர்லெங்கோவின் கர்தினால் கெவின் பெரெல் நேற்றைய தினம் அறிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட பெரெல், நேற்று திங்கட்கிழமை காலை 7.35 மணிக்கு (உள்ளூர் நேரம்) அவர் காலமானார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸின் முழு வாழ்க்கையும் கர்த்தருக்கும் அவருடைய திருச்சபைக்கும் சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டது," என்று அவர் தனது அறிவிப்பில் கூறினார்.

11

## யாழ். மரியன்னை பேராலயத்தில் ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று திங்கட்கிழமை யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் கலாநிதி ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தலின்போது குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள், அவயவங்களை இழந்து

11

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விசாரணைகளுக்கு சுயாதீன வழக்குரைஞர் அலுவலகம் அவசியம்!

### மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஈஸ்டர் குண்டு வெடிப்பு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களை பொறுப்புகூற வைப்பதற்காக, குறிப்பாக ஒரு சுயாதீனமான வழக்கு தொடரும் அலுவலகத்தை நிறுவுமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

கொலை செய்யும் கூலிப்படைகள் இல்லாத - வெள்ளை வான்கள் இல்லாத - சட்டவிரோத தடுப்பு முகாம்கள் இல்லாத புதிய சமூகமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஆறு வருடங்களாவதை குறிக்கும் விதத்தில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் விசாரணை தொடர்பில் ஜனாதிபதிக்கு ஏழு வேண்டுகோள்களை விடுத்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முழுமையான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்,

11

## பயங்கரவாத சட்டத்துக்கு தற்காலிக தடை வேண்டும்

### அரசாங்கத்திடம் கோரியது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஏப்ரல் 22

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்துவதற்கு தற்காலிகமாக தடை விதிக்கும் யோசனையை முன்மொழிந்துள்ள ஐரோப்பிய ஒன்றியம் இது குறித்து அரசாங்கத்தின் கருத்தைக் கோரியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த யோசனை குறித்து அரசாங்கம் இன்னமும் ஆராயவில்லை என தெரியவருகிறது.

இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் ஏனைய மேற்குலக நாடுகளுடன் இணைந்து வேண்டுகோள் விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அரசாங்கத்துடனான அண்மைய பேச்சுகளின் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை

11

## சர்ச்சைக்குரிய கருத்துக்களை ஜனாதிபதி தவிர்க்கவேண்டும்!

### தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, ஏப். 22

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கே நிதி வழங்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இரண்டு தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்த கருத்து அரசியல் ரீதியாக சில சர்ச்சைகளுக்கு வழிவகுக்கும் என்பதால், இது போன்ற கருத்துகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதிக்கு அறிவுறுத்துமாறு

11

## சிங்கள மேலாதிக்கத்துக்கு மீளவும் இடங்கொடாதீர்கள்

### வடக்கு மக்களிடம் சீ.வீ.கே. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 22

வடக்கில் காலூன்ற நினைக்கும் தேசிய மக்கள் சக்தியின் சிங்கள மேலாதிக்கத்துக்கு மக்கள் மறுபடியும் அரசியல்ரீதியில் இடம்கொடுக்கக்கூடாது. வரவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அதற்கானதாக மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் இலங்கை தமிழ்

11

## மைத்திரிபால சிறிசேனவிடம் 7 மணிநேரம் வாக்குமூலம்!

கொழும்பு, ஏப். 22

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சுமார் 7 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் உட்பட பலருக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கியமை தொடர்பான விசாரணைகளுக்காக மைத்திரிபால சிறிசேன வாக்குமூலம் வழங்குவதற்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை முன்னிலையானார்.

11

## தேசபந்துவை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு!

கொழும்பு, ஏப். 22

பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட இருவருக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மாத்தறை பிரதான நீதிவான் அருண புத்ததாச உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட

11

## பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஜனாதிபதி தெளிவுபடுத்தவேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 22

உலக வங்கியின் அறிக்கைக்கு அமைய நாட்டின் தேசிய உற்பத்தி வருமானமானது 5 வீதத்திலிருந்து 3.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ட்ரம்ப்பின் வரி பிரச்னைக்கு

11

## முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு இலஞ்ச ஆணைக்குழு அழைப்பு!

கொழும்பு, ஏப். 22

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 25 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்


11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி!






கொழும்பு, ஏப். 22

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் நேற்று திங்கட்கிழமை நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டு நேற்றுடன் 6 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் நினைவேந்தல் ஆராதனைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் உட்பட நாட்டின் 8 இடங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது்டன் பலர் காயமடைந்தனர்.

ஏப்ரல் 21 தாக்குதலின் 6ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இரங்கல் ஆராதனை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் நேற்று காலை 8.45 மணியளவில் நாடளாவிய ரீதியாக உள்ள சகல வழிபாட்டு தலங்களிலும் மணி ஓசை எழுப்பப்பட்டு, 2 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ)

## சைவ புலவர் பரீட்சை திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படுகின்ற 2025ஆம் ஆண்டுக்குரிய இளம் சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் மே 16, 17, 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப் புலவர் செ. த. குமரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலாறு, 17ஆம் திகதி சனிக்கிழமை சாத்திரம், உரைநடை, 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலக்கியம், இலக்கணம் ஆகிய பாடங்களுக்குரிய பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் மே முதல் வாரத்தில் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவித்துள்ளார். (ஐ)

## துப்பாக்கியை காண்பித்து மிரட்டிய வனவள அதிகாரி!

### சத்தியலிங்கம் குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 22

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் மக்களின் சொந்த காணிகளை எல்லையிட வந்த வனவள அதிகாரி ஒருவர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதேச தேர்தல் காரியாலயம் வவுனியா மாகறம்பைக்குளம் பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியாவில் உள்ள நான்கு உளளூராட்சிச் சபைகளிலும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இது ஒரு எல்லைப்புற மாவட்டம். இதன் இனப்பரம்பல் கணிசமான அளவு மாற்றப்பட்டிருக்கிறது. எந்த அரசாங்கம் வந்தாலும் இந்த செயற்திட்டம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

தற்போது இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணம் நாட்டின் பொருளாதார பிரச்னையே. கடந்த கால ஆட்சியாளர்கள் விட்ட தவறே ஜே.வி.பி. என்ற என்.பி.பி. ஆட்சியமைப்பதற்கு காரணமாக இருந்தது.

இலங்கை மக்கள் என்ற வகையில் பார்த்தால் ஊழல் இல்லாத ஒரு ஆட்சி, மக்களுடைய சொத்தை கொள்ளை அடிக்காத அரசாங்கமும், ஆட்சியாளர்களும் இருக்கவேண்டியது அனைவருக்கும் பொதுவான ஒரு பிரச்னை.

ஆனால், தமிழ் மக்களை பொறுத்தவரை இதைவிட மேலதிகமாக இனப்பிரச்னை என்ற ஒன்று இருக்கிறது. இந்த அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்தை காண்பதற்குரிய முதற்படிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு நாங்கள் நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் ஆதரவு அளிக்கலாம்.

ஆனால் எமது அரசியல் போராட்டத்திற்கான தீர்வு கிடைக்கும் வரையில் தமிழ் மக்களாகிய நாங்கள் விடிவு நோக்கிய பயணத்தில் மாற்றமில்லாமல் தொடர்ந்து பயணிக்கவேண்டிய கடமை இருக்கிறது.

தற்போதைய அரசுக்கு பயங்கவரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும் அதனை நீக்காமல் இப்போதும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதேபோல அண்மையில் வவுனியாவில் மக்களின் சொந்தக் காணிகளுக்குள் வனவளத் திணைக்களம் எல்லை போடுகின்றமை தொடர்பாக பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. நான் அங்கு சென்றமையால் அதனை தடுக்க முடிந்தது. ஏன் அரசாங்கத்தால் இதனை செய்யமுடியாது.

இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த காணிகளுக்குள் செல்வதை இந்த திணைக்களம் எதற்காக தடுக்கிறது. வவுனியா பூவரசங்குளம் பகுதியில் உள்ள மக்கள், இது தங்களுக்குரிய காணி என்று தெரிவித்தபோது அங்கு நின்ற வனவளத் திணைக்கள அதிகாரி தனது துப்பாக்கியை எடுத்து காட்டியுள்ளார். நான் அவர்களை எச்சரித்திருந்தேன்.

இதன் மூலம் அடக்குமுறை அரசியலை செய்வதற்கு அரசாங்கம் மாறினாலும் அரச நிர்வாகம் மாறவில்லை என்பது புலப்படுகிறது. அதனை மாற்றவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது- என்றார். (அ)

## பாப்பரசர் மறைவு; சஜித் இரங்கல்

கொழும்பு, ஏப். 22

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-


இயேசு காட்டிய பாதையை அங்கீகரித்து, திருத்தந்தை பிரான்சிஸ் கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்கிய தலைமைத்துவம் சமூகத்திற்கு மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருந்தது.

நல்ல உலகம் அமைய விரும்புவோருக்கு அவருடைய பரலோக பிரசன்னம் பேரிழப்பு. அவருடைய எளிமையான வாழ்க்கை காட்டிய பாதையை நன்கு அறிந்துகொள்வதே அவருக்கு செய்யக்கூடிய உண்மையான மரியாதையாகும்.


மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் ஆத்மா இறைவனின் இல்லத்தில் இளைப்பாற வேண்டுகிறோம்.

அவர் பரலோகத்துக்கு செல்வது ஒரு சிறந்த உலகத்திற்காக ஏங்கும் அனைவருக்கும் ஒரு பெரிய இழப்பு.

அவரை உண்மையிலேயே கௌரவிப்பது, அவரது தாழ்மையான வாழ்க்கையால் ஒளிரும் பாதையை தெளிவாக அடையாளம் கண்டு பின்பற்றுவதாகும் - என்றுள்ளது. (அ)



## பளை பொது சந்தைக்கு செல்லும் வாயிலில கொட்டப்பட்டுள்ள மண்!



கிளிநொச்சி, ஏப். 22

கிளிநொச்சி - பச்சிளைப் பள்ளி - பளை பொதுச் சந்தைக்கு செல்லும் பிரதான நுழைவாயில் இரு புறமும் மணல் கொட்டப்பட்டு பரவிக் காணப்படுவதால் மக்கள் சந்தைக்கு சென்று பொருள்களைக் கொள்வனவு செய்ய மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

பளை பொதுச் சந்தை கட்டடத் தொகுதி தினமும் மக்கள் வருகை தரும் முக்கிய இடமாக இருப்பதுடன் மீன் சந்தை மற்றும் மரக்கறிச் சந்தை என்பன அருகருகே காணப்படுகின்றன.

இச் சந்தைக்கு உட்செல்லும் இரு புறப் பாதைகளிலும் மணல் கொட்டப்பட்டு பரவிக் காணப்படுவதால் தமது அன்றாடச் செயற்பாடுகளைச் செய்ய மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும் , ஓட்டோ, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் வருபவர்கள் தமது வாகனங்கள் இலகுவில் பழுதடைவதாகவும் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

எனவே, இது விடயத்தில் அதிகாரிகள் அக்கறை செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-05)

## சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றங்கள் ஊடாகவே நடவடிக்கை

### கூறுகிறார் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, ஏப். 22

அரசியல் நலன்களுக்காக, தேர்தல் மேடைகளிலும் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களிலும், அரசியல் செயற்பாட்டாளர்களின் கைதுகள் தொடர்பில் பேசப்படுவதாகவும் யாருக்கு எதிராகவேனும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின் அவை தொடர்பில் நீதிமன்றங்களும் நீதிக் கட்டமைப்புக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் உள்ள தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்ற, கட்சி தலைவர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நாடெங்கிலும் ஒரே நாளில் நடத்தப்படாமல், சிலவற்றுக்கான தேர்தல் திகதி ஒத்திவைக்கப்படுமாயின் முதலில் இடம்பெறும் பிரதேசங்களின் தேர்தல் முடிவுகள், பின்னர் நடத்தப்படும் தேர்தல் முடிவுகளில் தாக்கம் செலுத்தும்.

இந்த விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கவனத்தில் எடுக்கவேண்டும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.04.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நமது நிலையை உணராத அரசியல்

ஒரு சொற்தொடர் உண்டு . அதாவது, பூனைகள் சிங்கமாக கற்பனை செய்யும்போது முதலில் இழப்பது அதனால் அடையக்கூடிய எலியைத்தான். ஈழத் தமிழர் அரசியலை ஆழமாக உற்று நோக்கினால் இந்தக் கூற்றுக்கு ஒப்பான நிலைமையை காணலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் இலக்கை முன்னிறுத்தி, அதனை முழுமையாக நம்பி அதற்காக இறுதிவரையில் பேராடி மடிந்தது. விடுதலைப் புலிகளுக்கு பின்னரான அரசியல் சூழல் என்பது முற்றிலும் வேறானது. ஈழத்தமிழர்கள் பேரம்பேசும் ஒரு தரப்பு என்னும் தகுதி நிலையை முற்றிலும் இழந்துவிட்ட நிலையில்தான் 2009இற்கு பின்னரான அரசியல் சூழலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு போரில் அரசு வெற்றி பெறும் நிலையில் - அதிலும் குறிப்பாக போராட்டத் தரப்பு நிர்மூலமாக்கப்படும்போது, நிலைமை அப்படித்தான் இருக்கும்.

இந்தப் பின்புலத்தில், எவ்வாறான அரசியல் அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் - எவ்வாறான அணுகுமுறையை கடைப்பிடித்தால் அரசியலை தொடர்ந்தும் முன்னெடுக்கலாம்? 2009இல் மாபெரும் சரிவு ஒன்றை சந்தித்தபோது, ஈழத்தமிழ் அரசியல் சமூகத்துக்கு முன்னால் மேற்படி கேள்விகள்தான் துருத்திக்கொண்டு மேலெழுந்தன.

ஆனால், இந்தக் கேள்விக்கு நேர்மையாக பதில் தேட அப்போதிருந்த சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் தலைவர்கள் என்போர் முயற்சிக்கவில்லை - ஆகக்குறைந்தது தங்களுக்குள் இது தொடர்பில் மனந்திறந்த ஓர் உரையாடலுக்கும் அவர்கள் செல்லவில்லை. வெறும் கற்பனைகளில் ஒரு தரப்பும் சர்வதேச அழுத்தங்கள் மூலம் நீதி கிடைக்கப் போவதான கதைகளுடன் இன்னொரு தரப்பும் கானல் நீரான சமஷ்டி கதையுடன் சம்பந்தன் இன்னொரு புறமாகவும் நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தனர்.

திரும்பிப் பார்த்தால், ஒருவித நன்மையும் இல்லாமல் ஆகக்குறைந்தது, தமிழ் மக்கள் ஒரு பாதிக்கபட்ட மக்கள், அவர்கள்மீது பரிவு காண்பிக்க வேண்டும் என்பதான புறச்சூழல்கூட இல்லாமல் போய்விட்ட ஒரு நிலையில் உள்ளூராட்சி தேர்தல் வெற்றிக்கான பிரசாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இறுதியில் உள்ளூராட்சி தேர்தல் வெற்றியின் மூலம் தமிழர் தேசத்தை மீட்கப் போவதாக கற்பனை செய்யும் நிலைக்கு ஈழத் தமிழர் அரசியல் தேய்ந்து போயிருக்கிறது.

இந்த இடத்தில்தான் அந்தக் கூற்று பொருந்திப் போகின்றது - பூனைகள் தங்களை சிங்கமாக (வேண்டுமனால் சிங்கத்துக்கு பதிலாக புலியென்று உருவகப்படுத்திக் கொள்ளலாம்) கற்பனை செய்யும்போது, முதலில் அடையக்கூடிய விடயங்கள்தான் கைநழுவிப் போகும்.

2009இற்கு பின்னரான சூழலில் தமிழ் மக்களுக்கான, அரசியலை உயிர்ப்பிப்பதற்கு ஒரேயோரு வழியாக இருந்தது அரசமைப்பில் இருப்பதை அமுல்படுத்துவதன் ஊடாக, நல்லிணக்கத்துக்காக அனைத்து சமூகங்களையும் தயார் செய்வதுதான். இந்தக் கோரிக்கையுடன் இந்தியாவிடமும் அதே கோரிக்கையுடன் சர்வதேசத்திடமும் சென்றிருந்தால் இன்று நிலைமைகளில் ஓரளவு முன்னேற்றத்தை கண்டிருக்கலாம். ஆனால், இன்றோ, பூனை என்பதை மறந்ததால், கிடைக்கக்கூடிய இரையையும் இழந்துபோக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசமைப்பில் இருப்பதைக்கூட அமுல்படுத்துவது சாத்தியம்தானா என்னும் கேள்வியுடன் அலைக்கழிய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்தியா ஒருவேளை அதனை உச்சரிக்காது விட்டால், அதுவும் இல்லை என்றாகிவிடும்.

# சட்டவிரோத மீன்பிடியை தடுக்கக்கோரி முல்லைத்தீவில் மீனவர்கள் போராட்டம்



முல்லைத்தீவு, ஏப். 22

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி தொழிலை கட்டுப் படுத்தக் கோரி மாவட்ட செயலகம் முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை மீனவர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

"அரசே சட்ட விரோத மீன்பிடி தொழிலை கட்டுப் படுத்தி, நீரியல் வளங்களைப் பாதுகாப்பவர்களை அச்சுறுத்தும் சமூக விரோதிகளை கட்டுப்படுத்து" என்ற பதாகையை ஏந்தியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்துமாறு மீனவர்கள் தொடர்ச்சியாக கோரி வந்த நிலையில் அண்மைக் காலமாக கடலிலும் நந்திக் கடல் களப்பு உள்ளிட்ட பகுதிகளிலும் சட்டவிரோத தொழில்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில், சட்ட விரோத தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் அண்மையில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி தொழிலை கட்டுப்படுத்துவதற்காக பாடுபடுகின்றவர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை கட்டுப்படுத்துமாறு கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது. (எ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 22

நாவற்குழி தெற்கு பெரும் படை அம்மன் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 02 எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து, "வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்" என்னும் தலைப்பில் இளம்சைவப்புலவர் க. கயிலைவாசன் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# வங்கி கூரையை பிரித்து திருட்டு; முல்லைத்தீவு இளைஞன் கைது!

முல்லைத்தீவு, ஏப். 22

முல்லைத்தீவு பகுதியில் வங்கியொன்றின் கூரை உடைக்கப்பட்டு திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு,

முல்லைத்தீவு கூட்டுறவு கிராமிய வங்கி கடந்த 17 ஆம் திகதி கூரைப்பகுதி உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான கைபேசி ஒன்றும், 52,000 ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளது.


இதனையடுத்து குறித்த வங்கி நிர்வாகத்தினரால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த கிராமிய கூட்டுறவு சங்கத்தில் பொருத்தப் பட்ட கண்காணிப்பு கருவியின் (சி.சி.ரிவி) உதவியுடன், திருடியதாக கூறப்படும் சந்தேகநபரின் முகநூலில் போடப்பட்ட தொலைபேசி பதிவையும் அடிப்படையாக கொண்டு சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொக்கிளாய் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேகநபரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. அத்துடன், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தவும் கொக்கிளாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரம் தழைக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமுடன் பழகுங்கள்.

**கடகம்**
கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சி அதிகாரிகள் பாராட்டுவர்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருச்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் தர்மசங்கடமான சூழல்களில் சிக்குவீர்கள். சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டும்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவை.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

# காங்கேசன்துறையில் வட மாகாண வலய குற்றத்தடுப்புப் பிரிவு அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாக கட்டமைப்பை விரிவுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலக வளாகத்தில் வடமாகாண வலய குற்றத்தடுப்புப் பிரிவு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இவ் அலுவலகமானது, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சீ.ஏ.தர்மபால உள்ளிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (எ)



# வாய்த்தர்க்கம் கைக்கலப்பாக மாறியது யாழில் குடும்பஸ்தர்மீது கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ். வடமராட்சி கிழக்கு, உடுத்துறை பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர்மீது கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைக்கலப்பாக மாறியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடுத்துறை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் வீட்டுக்கு ஆழியவளை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சென்று உரையாடிய போது, அது வாக்குவாதமாக மாறி வன்முறையில் முடிந்தது.

தாக்குதலில் படுகாயமடைந்த ஆழியவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் மருதங்கேணி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் மதுபோதையில் இருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ)

# பெருமளவு போதை மாத்திரைகளுடன் சாவகச்சேரியில் இளைஞன் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப். 22

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெருமளவான போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது, அவரிடமிருந்து 1010 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர் தற்போது சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து சொந்தசெலவில் சூனியம் வைக்காதீர்

## தமிழர்களிடம் முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதாவது ஜே.வி.பிக்கு வாக்களித்தால் அது தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த செலவில் சூனியம் வைத்துக்கொண்டதற்கு நிகராகிவிடும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, அம்பாள்குளம் கிராமத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மிக முக்கியமான கால கட்டத்தில் இடம்பெறுகிறது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை தொடர்ந்து உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

எனவே, உள்ளூர் அதிகாரங்கள் அந்தந்த உள்ளூர் தரப்பினர் களிடமே இருக்க வேண்டும். அதிகாரப் பகிர்வுக்காக போராடிய அதற்காக பல தியாகங்களை செய்த இனம் நாங்கள்.

அந்தத் தியாகங்களுக்கு ஈடாக தீர்வுகள் இதுவரை கிடைக்காத போதிலும் கிடைத்த இந்த உள்ளூர் அதிகாரத்தை யாவது நாம் தொடர்ந்தும் எங்களுக்குள் வைத்திருக்க வேண்டும். அதுவே தமிழினத்தின் எதிர்கால அரசியல் உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நகர்வுகளுக்கு பலம் சேர்க்கும்.

ஆகவே, தமிழ் மக்கள் நாட்டில் ஏற்பட்ட ஒரு பொதுவான ஓர் அலையில் சிக்குண்டு செல்வார்கள் எனில் அந்த அலை தமிழ் மக்களை சிதைத்து சின்னாபின்னமாக்கிவிடும்.

இந்த அலை என்பது இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை இனங்களை குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை மிக மோசமாக பாதிக்கும் அலை. இந்த அலைக்குள் சிக்குண்டால் ஒருபோதும் கரை சேர முடியாது போய்விடும்.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எங்கள் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்புள்ளை விபத்தில் கணவன், மனைவி பலி!

கொழும்பு, ஏப். 22

தம்புள்ளை - குருநாகல் வீதியின் பெலிகமுவ பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் தெஹியத்தகண்டிய பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 28 வயதுடைய கணவன், மனைவி எனத் தெரியவந்துள்ளது.

பலத்த காயமடைந்த தம்பதியின் பிள்ளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கலேவெலயிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியைக் கடந்த நாய் மீது மோதியதில் வீதியின் ஓரத்தில் இருந்த பள்ளத்தில் வீழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மூவரும் கலேவெல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, சிகிச்சைப் பலனின்றி இருவரும் உயிரிழந்துள்ளனர். சிறுவன் மேலதிகச் சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஈஸ்டர் தாக்குதலை அரசியல் மயப்படுத்தி பாதிக்கப்பட்டோரை அவமதிக்கவேண்டாம்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. இது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் செயலாகும். தற்போது நீங்கள் வீதிக்கு இறங்கத் தயாரா என பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கேட்பதாக பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. இது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் செயலாகும். தற்போது நீங்கள் வீதிக்கு இறங்க தயாரா என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையிடம் கேட்கின்றோம். இது முற்றுமுழுதாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தாக்குதல் என்று கூறப்படுகிறது. அவ்வாறிருக்கையில் எதற்காக பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுகின்றனர்?

நான் தெரிவித்துள்ள சில கருத்துக்களால் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. ஆனால் நாம் அவற்றைக் கவனத்தில் கொள்வதில்லை. காரணம் நாம் நியாயமான விமர்சனங்களையே முன்வைத்திருக்கின்றோம். ஊழல், மோசடி தொடர்பில் ஆராய்வதாகக் கூறிய அரசாங்கம் 323 கொள்கலன்களை பரிசோதனைகள் இன்றி விடுவித்துள்ளது. எனவே பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் மக்களுக்கு முன்னாள் தேசிய மக்கள் சக்தி நிலை தடுமாறி நிற்கின்றது. இதன் காரணமாகவே தனது கட்சி வெற்றி பெறாத உள்ளூராட்சிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். நாம் எந்த பொய்யும் கூறவில்லை என்று அரசாங்கம் கூறுவதே மிகப் பெறும் பொய்யாகும்-என்றார். (அ)

# அனைத்து வாக்குச் சீட்டுக்களையும் 30 ஆம் திகதிக்குள் அச்சிட ஏற்பாடு!

கொழும்பு, ஏப். 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து வாக்குச் சீட்டுகளையும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் அச்சிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு எதிர்பார்ப்ப தாக அரச அச்சக மா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித் தார்.

அத்துடன், நீதிமன்றத் தீர்ப்பிற்கமைய 102 உள்ளூராட்சி மன்றங்களுக்கான அஞ்சல் வாக்குச் சீட்டுகளை மீண்டும் அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் அனைத்துத் அஞ்சல் வாக்குச் சீட்டுகளும் அச்சிடப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அரச அச்சக மா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித் தார். (அ)

# அமைச்சர் பங்களாக்களில் பெறுமதியானவை மாயம்!

கொழும்பு, ஏப். 22

சில அமைச்சர் பங்களாக்களில் பெறுமதிமிக்க பகுதிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சில பங்களாக்களை சுற்றி அதிகப்படியான காடுகள் வளர்ந்திருப்பதால் பல அமைச்சர் பங்களாக்கள் பாழடைந்து விட்டதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாக பயன்படுத்தப்படாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், பல அமைச்சர் பங்களாக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக அமைச்சு கூறுகிறது.

அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்பு பழுதுபார்க்க வேண்டியிருக்கும் என்றும், புதுப்பிப்பதற்கான நிதியை திரட்டுவது ஒரு பிரச்னை என்றும் அமைச்சு செய்தித் தொடர்பாளர் கூறினார்.

கொழும்பு நகரில் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட சுமார் ஐம்பது பங்களாக்கள் உள்ளன. புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை இந்த பங்களாக்களைப் பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளது. (அ)

# மின்னல் தாக்கி தாய் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 22

குடா ஓயா, மஹயாய பிரதேசத்தில் மின்னல் தாக்கி நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

எத்திலிவெவ, மஹயாய பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய தாய் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது வீட்டுக்கு அருகில் உள்ள காணியில் வேலை செய்து கொண்டிருக்கும் போது மின்னல் தாக்கி காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து காயமடைந்தவர் தெஹிகஸ்ஹந்திய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# போதைப்பொருளுடன் இளைஞர் கைதானார்!

கொழும்பு, ஏப். 22

கொழும்பு - வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிங்கபுர பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் வெல்லம்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே சந்தேக நபர் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கொலன்னாவை பிரதேசத்தில் வசிக்கும் 28 வயதுடைய இளைஞர் ஆவார்.

சந்தேக நபர்களிடமிருந்து 10 கிராம் 400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சாரதியை கத்தி முனையில் மிரட்டி கார் கொள்ளையிட்ட இருவர் கைது!

கொழும்பு, ஏப். 22

களுத்துறை - வாதுவை பிரதேசத்தில் சாரதி ஒருவரை கத்தி முனையில் மிரட்டி காரைக் கொள்ளையிட்டுச் சென்றதாக கூறப்படும் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பாணந்துறை - பின்வத்தை பிரதேசத்தில் வசிக்கும் 19 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் இருவரே கைது செய்யப்பட்டனர்.

மூன்று இளைஞர்கள் கார் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நிலையில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்துச் சாரதியை கத்திமுனையில் மிரட்டி காரை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்துக்கு முகங்கொடுத்த கார் சாரதி ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஆவார். பின்னர் கார் சாரதி இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸாரால் பாணந்துறை - பின்வத்தை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்துச் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இராணுவ பஸ் - லொறி மோதி விபத்து சிப்பாய்கள் உட்பட 22 பேருக்கு காயம்

கொழும்பு, ஏப். 22

நிட்டம்புவை - கிரிந்திவெல வீதியில் இடம்பெற்ற விபத்தில் இராணுவச் சிப்பாய்கள் உட்பட 22 பேர் காயமடைந்துள்ளதாக கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இராணுவச் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவையிலிருந்து கிரிந்திவெல நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.




விபத்தின்போது, பஸ் சாரதியும் அதில் பயணித்த 21 இராணுவச் சிப்பாய்களும் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நுரைச்சோலையில் நிறுத்தப்பட்ட மின்பிறப்பாக்கி மீண்டும் இயக்கம்

கொழும்பு, ஏப். 22

புத்தாண்டு காலத்தில் குறைந்த தேவை காரணமாக செயலிழக்கச் செய்யப்பட்ட நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின்பிறப்பாக்கி நேற்று முற்பகல் 11.00 மணிக்கு மீண்டும் இயக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய அதிக மின் தேவைக்கு ஏற்ப மூன்று அலகுகளும் இயங்குவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன இதனை அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் மீறல்களை விசாரிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தவறிவிட்டது

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 22

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீது கடுமையான தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.**

கடுவெல மாநகர சபைக்கு போட்டியிடும் ஐக்கிய குடியரசு முன்னணி வேட்பாளர்கள் மாநகர சபைக்கு வெளியே நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதே முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இவ்வாறு கூறினார்.

வரவிருக்கும் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டுமே தனது அரசாங்கம் நிதி வழங்கும் என்று ஜனாதிபதி அறிவித்தமை குறித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு அளித்ததாக ரணவக்க கூறினார்.

பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு உதவுவதற்காக அஸ்வெசும என்ற நலன்புரி திட்டம் இந்த ஆண்டு மேலும் 400,000 குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்று ஜனாதிபதி சமீபத்தில் அறிவித்தமை குறித்த முறைப்பாடு தொடர்பிலும் தேர்தல் ஆணையகம் அமைதியாக இருந்ததாகவும் ரணவக்க குற்றம் சாட்டினார். (அ)

# சந்தேகத்திற்கிடமாக உயிரிழந்த சிறுமி காரணத்தை அறிய நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு, ஏப். 22

சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்ததாகக் கூறப்படும் 12 வயதுச் சிறுமியின் மரணம் தொடர்பாக பிரேத பரிசோதனை நடத்தி, மரணத்திற்கான காரணத்தை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு குருநாகல் போதனா வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரிக்கு மஹவ பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொல்பிதிகம பொலிஸாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட "பி" அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொல்பிதிகம - கலஹிட்டியாய - நிகவெள பகுதியைச் சேர்ந்த 12 வயதான தமது மகள் திடீரென உயிரிழந்ததாக அவரது தாயாரினால் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவித்த பொலிஸார்,

சிறுமியின் மரணத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிவதற் கான மேலதிக விசாரணை களை முன்னெடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ள னர்.

அதன்படி, நீதிமன்றம் குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (அ)

# பிள்ளையானுக்காக நாமல் ராஜபக்ஷ கவலைப்படும் காரணம் வெளிவரும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஏப். 22

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்ற சிவனேசத்துரை சந்திரகாந்தன் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கவலையடைவதற்கு காரணம் உள்ளதாகவும், அதனை எதிர்காலத்தில் அனைவரும் அறிந்து கொள்ள முடியும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் விசாரணைக் குழு உரிய முறையில் விசாரணைகளை நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் என்ற அடிப்படையில் அதற்கான வசதிகளை மாத்திரம் தங்களது தரப்பு வழங்குவதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

விசாரணைகளை தொடர்ந்து சட்டமா அதிபரால் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும்.

இதனையடுத்து நீதிமன்றத்தின் ஊடாக சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்கப்படும்.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய சரியான சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அவ்வாறு இடம்பெறும் போது உதய கம்மன்பில, ரணில் விக்ரமசிங்க, நாமல் ராஜபக்ஷ மற்றும் சரத் வீரசேகர போன்றோர் பதற்றமடைவது தொடர்பில் எமக்கு எவ்வித ஆச்சரியமும் இல்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார். (அ)

# அமெரிக்காவின் புதிய வரியால் ஏற்படக்கூடிய தாக்கத்தை கட்டுப்படுத்த மாற்று நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 22

இலங்கை மீது அமெரிக்கா விதித்துள்ள புதிய வரியினால் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான மாற்று நடவடிக்கைகளை இலங்கை முதலீட்டுச் சபை மேற்கொண்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக இலங்கை முதலீட்டுச் சபையுடன் இணைந்துள்ள முக்கிய 50 ஏற்றுமதியாளர்களுடன் சந்திப்பொன்றை அந்தச் சபையின் தலைவர் அர்ஜூன ஹேரத் மேற்கொண்டார்.

அவரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த திறந்த உரையாடலில் பல பொருளாதார நிபுணர்கள் உட்பட வர்த்தகச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இந்த சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதியின் ஆலோசகர் நேர்மறையான முடிவுகளை அடைவதற்கும் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் இதுவரை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைச் சுட்டிக் காட்டினார்.

இராஜதந்திர மட்ட விவாதங்கள் ஏற்கனவே நடந்துள்ளதாகத் தெரிவித்த அவர், வாஷிங்டனில் நிலை கொண்டுள்ள இலங்கை இராஜதந்திர அதிகாரிகள் வெள்ளை மாளிகையின் வர்த்தகத் துறையில் உள்ள பிரதிநிதிகளுடன் ஏற்கனவே தொடர்பினை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை,

மேலும் ஒருமித்த கருத்தை எட்டுவ தற்காகச் சொல்லப் பட்ட வரிக் கட் டணங்கள் குறித்து அமெரிக்க அரசாங்கத்துடன் தனிப்பட்ட ஆலோசனைகளைப் பெறச் சுமார் 70 நாடுகள் ஏற்கனவே அமெரிக்காவுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பல்வேறு பொருட்களுக்கான இலங்கை வர்த்தகர்களில் 200 பேர் வரையிலானவர்கள் இலங்கை முதலீட்டுச் சபையுடன் தொடர்பைக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், கடந்த வருடத்தில் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு மொத்தமாக 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

அதேபோல இலங்கைக்கான ஏற்றுமதிகள் 368.2 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் ஏற்றுமதி நடவடிக்கைகளுடன் போட்டியிடும் நாடுகளின் மாறுபட்ட கட்டணங்கள் மற்றும் ஒவ்வொரு துறையிலும் அவற்றின் தாக்கம் குறித்து விரிவாக விவாதிக்கப் பட்டதாக அறிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# பாரபட்சம் காட்டுகின்றது தேர்தல்கள் ஆணைக்குழு

## ஜீவன் தொண்டமான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 22

தேர்தல்கள் ஆணைக்குழுவின் சில செயற்பாடுகள் வருத்தமளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகையில் நடைபெறும் சமய வழிபாட்டை தாம் வரவேற்பதாகவும் எனினும் குறித்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்ட விடயம் வருத்தமளிப்பதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தேர்தலை முன்னிட்டு கல்வி ரீதியிலான செயற்பாடுகள், பொருளாதார ரீதியான செயற்பாடுகள், காணி உரிமை தொடர்பிலான செயற்பாடுகள் ஆகியவற்றைத் தடை செய்யும் தேர்தல்கள் ஆணைக்குழு சமயச் செயற்பாடுகளுக்கு மட்டும் தடை விதிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு பாரபட்சம் காட்டுவதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று தேர்தல் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த இ.தொ.கா பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் இவ்வாறான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதில் எந்த நன்மையும் இல்லையென அவர் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாகவும் ஜனநாயக ரீதியாகவும் இயங்கவேண்டிய ஒரு நிறுவனம் என ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டினார். எனவே தேர்தல்கள் ஆணைக்குழுவின் இவ்வாறான செயற்பாடுகள் வருத்தத்திற்கு [illegible] டார். (அ)

# பிரச்னைகளை எதிர்கொள்வதில் அநுர அரசுக்கு அனுபவம் இல்லை

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 22

தற்போதைய அரசாங்கத்துக்கு பிரச்னைகளை எதிர்கொள்வதில் அனுபவம் இல்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால்காந்த உண்மையை பேசுகிறார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றும் வேலைத் திட்டம் தொடரும் என்று லால்காந்த கூறியிருக்கிறார். ஆனால் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் உண்மையைக் கூறவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம் விரைவில் முடிவுக்கு வரும்.

அந்த திட்டம் முடிவடைந்த பின்னர், தற்போதைய அரசாங்கத்திடம் கடன்களை அடைக்கும் முறை, வெளிநாடுகளை எவ்வாறு கையாள்வது, வரிச் சலுகைக ளைப் பெறுவது போன்ற எந்த எதிர்காலத் திட்டங்களும் இல்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர நேரடியாக ட்ரம்ப்பை சந்தித்து பேச்சுகளை முன்னெடுக்கவேண்டும்!

## ஹர்ஷ டி சில்வா கோரிக்கை



கொழும்பு, ஏப். 22

**சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பருவகாலக் கூட்டத்துக்குச் செல்லும்போது அமெரிக்காவின் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினரை சந்திக்கவுள்ளதாகக் கூறுகின்றனர். அவ்வாறான பேச்சுவார்த்தைகள் ஊடாக எதையும் செய்ய முடியாது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேரடியாகச் சென்று ட்ரம்ப்பை சந்தித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரித்தார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-ட்ரம்ப்பின் வரி கொள்கை தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே நான் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றேன். ஆனால் அரசாங்கம் அவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை.

தற்போது சீனாவைத் தவிர ஏனைய நாடுகளுக்கு 90 நாட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதனை விடுத்து வரி நீக்கம் செய்யப்படவில்லை. எமக்கு முன்னர் வேறு நாடுகள் சென்று அமெரிக்காவுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைத்துக் கொண்டால் எமக்கு நெருக்கடி ஏற்படும். எனவே எமக்கு நேரம் போதாது. விரைவில் இதற்கு பொறுத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்.

வரி விதிக்கப்பட முன்னரே இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் இது குறித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றார். அதற்கமைய அமெரிக்காவின் துணை ஜனாதிபதி இவ்வாரம் மோடியைச் சந்திப்பதற்காக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்த 90 நாட்களுக்குள் ஏதேனும் செய்வதற்கு இந்தியா தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

இந்தோனேசியாவும் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்திருக்கிறது. இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பருவகாலக் கூட்டத்துக்கு செல்லும்போது அமெரிக்காவின் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினரை சந்திக்கவுள்ளதாகக் கூறுகின்றனர்.

அவ்வாறான பேச்சுவார்த்தைகள் ஊடாக எதையும் செய்ய முடியாது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேரடியாக சென்று ட்ரம்ப்பைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவேண்டும்.

அதனை விடுத்து எனக்கு தெரியாது என்னால் முடியாது எனக் கூறிக் கொண்டு ஒழிந்து கொண்டிருப்பதால் எதுவும் நடக்கப் போவதில்லை. இம்மாத இறுதியில் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் இலங்கை வரவுள்ளனர். ஆனால் அடுத்த வருடம் இலங்கை மாத்திரமின்றி ஏனைய நாடுகளும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை இழக்க நேரிடும்.

புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையைப் பெற்றுக் கொள்ள நாம் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு இப்போதிலிருந்தே தயாராகவேண்டும். ஆனால் இந்த அரசாங்கத்திடம் எந்த திட்டமிடலும் இல்லை. ஜனாதிபதிக்கு இது தொடர்பில் நான் ஆலோசனை வழங்கினேன்-என்றார். (அ)

# அநுரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையீடு

கொழும்பு, ஏப். 22

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடத்துவதை தடுக்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

அவரது இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடத்துவதை தடுக்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார். நாட்டில் இதற்கு முன்னர் எந்தவொரு ஜனாதிபதியும் இவ்வாறு அழுத்தம் பிரயோகித்ததில்லை.

ஜனாதிபதியின் இந்த கூற்று முற்று முழுதாக மக்களின் வாக்குறுரிமைக்கு விடுக்கப்படும் அழுத்தமாகும். அது மாத்திரமின்றி ஜனாதிபதி, நிதி அமைச்சர் என்ற ரீதியில் 4 இலட்சம் பேருக்கும் அஸ்வெசும வழங்கப்படும் என்றும், விவசாயிகளுக்கு 15 000 மேலதிக உர நிவாரணம் வழங்கப்படும் என்றும் குறிப்பிடுகின்றார். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தாம் நிச்சயம் தோல்வியடைவோம் என்பதை அறிந்து கொண்டுள்ளதால் தான் ஜனாதிபதி இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றார்.

எனவே தான் ஜனாதிபதியின் இந்த செயற்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடளித்துள்ளோம். ஆரம்பத்தில் ஆயுதங்களால் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்த இவர்கள் தற்போது அச்சுறுத்தல்களாலும் அழுத்தங்களாலும் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 80 வீதமான உள்ளூராட்சிமன்றங்களைக் கைப்பற்றும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற அரசாங்கம் 6 மாதங்களுக்குள் மக்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. 1984களில் இடம் பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போதும் ஜே.வி.பி. இவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகித்தது. எனினும் மக் கள் அதற்கு அஞ்சவில்லை. அதேபோன்று தற்போதும் அச்சமின்றி மக்கள் தமது வாக் குகளைப் பதிவு செய்வர். அதனை அரசாங்கத்தால் தடுக்க முடியாது-என்றார். (அ)

# அதிவேக நெடுஞ்சாலை மூலம் 462 மில்லியன் ரூபா வருமானம்!

கொழும்பு, ஏப். 22

தமிழ்-சிங்களப் புத்தாண்டு காலப் பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மூலமாக 462 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

இந்த வருமானம் ஏப்ரல் 9 முதல் 19 ஆம் திகதி வரையிலான 10 நாட்களில் மட்டுமே பதிவானதாக நெடுஞ்சாலை செயல்பாடுகள், பராமரிப்பு மற்றும் மேலாண்மைப் பிரிவின் துணைப் பணிப்பாளர் ஜெனரல் ஆர்.ஏ.டி. கஹடபிட்டிய கூறினார்.

குறித்த காலகட்டத்தில் 1.3 மில்லியன் வாகனங்கள் அதிவேக வீதிகளில் பயணித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நெடுஞ்சாலைகளுக்கு நுழைவதற்கு முன், உங்கள் வாகனத்தின் பிரேக் அமைப்பு, ரயர்கள் மற்றும் சிக்னல் விளக்குகள் என்பவற்றை சரி பார்க்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், வாகனங்களுக்கு இடையே குறைந்தபட்சம் 50 மீற்றர் தூரத்தை பராமரிக்கவும், நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது ஆசனப் பட்டி கட்டாயம் அணியுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அதேநேரம், நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்கள் விபத்தில் சிக்கினால் உடனடியாக 1969 என்ற துரித எண்ணை தொடர்பு கொள்ளு மாறும் அவர் வலியுறுத்தினார். (அ)

# கூரிய ஆயுதத்தால் குத்தி ஒருவர் கொலை!

கொழும்பு, ஏப். 22

கொழும்பு - ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெல்பொல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச் சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஹங்வெல்ல, வெலிகன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கொலை செய்யப்பட்ட நபருக்கும் 61 வயதுடைய சந்தேக நபருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளார். தகராறின் போது, சந்தேக நபர் கொலை செய்யப்பட்ட நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். (அ)

# சாமர சம்பத் எம்.பிக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஏப். 22

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் மே மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிமன்ற நீதவான் நுஜித் டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

சாமர சம்பத் தசநாயக்க நேற்று திங்கட்கிழமை காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாக பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தியமை உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மே மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வர்த்தகரை கொலை செய்ய திட்டமிட்ட மேலும் 2 பேர் கைது

கொழும்பு, ஏப். 22

வர்த்தகரான கம்பஹா ஒஸ்மன் குணசேகர உள்ளிட்ட குழுவினரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு பேர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது. சம்பவம் தொடர்பில் நேற்று முன் தினம் கம்பஹாவில் சந்தேக நபர்கள் இருவர் ரி-56 ரக துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து மேலும் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, சந்தேக நபர்கள் 7 பேர் தொடர்பில் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு, மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவுள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட 50 வழக்குகளை பதிவு செய்யவுள்ள இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு!

கொழும்பு, ஏப். 22

அரசாங்க அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஊழல் சம்பவங்கள் தொடர்பாக 50 வழக்குகளைத் தாக்கல் செய்ய இலஞ் சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் கூற்றுப்படி, இந்த வழக்குகள் நீண்டகால இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைகளுடன் தொடர்புடையவை, அவை முடிக்கப்பட்டுள்ளன,

ஆனால் குற்றப்பத்தி ரிகை தாக்கல் செய்யப்பட வில்லை.

இந்த வழக்குகளில் பல சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 31 ஆத்மாக்களுக்கு விளக்குகள் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டக்களப்பு கருவேப்பங்கேணி புனித சூசையப்பர் தேவாலயத்துக்கு அருகாமையில் நேற்றுக்காலை நடைபெற்றது.

**ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்**

# மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் நேற்று 6ஆவது ஆண்டு நினைவேந்தல்



மட்டக்களப்பு, ஏப். 22

**மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுத் திங்கட்கிழமை காலை தேவாலயத்தின் முன்பாக பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அனுஷ்டிக்கப்பட்டது.**

அகில இலங்கை கிறிஸ்தவ [illegible] கட்சியின் தலைவர் [illegible] தலைமையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

குண்டுவெடிப்பில் உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்து பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் உட்பட பலர் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.

இதன்போது, உயிரிழந்தவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து, மெழுகுவர்த்தி ஏற்றி, சில நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தலின்போது அப்பகுதியில் பொலிஸார் மற்றும் விமானப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன் 80 பேர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை, கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம், நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் 250இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# ஏழு வயதுச் சிறுவன் காய்ச்சலால் மரணம்

மட்டக்களப்பு, ஏப். 22

ஓட்டமாவடி - மீராவோடை ஹாஜியார் வீதியைச் சேர்ந்த ஏழு வயதுச் சிறுவன் திடீர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த சிறுவன், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார் என்று பொலிஸார் கூறினர்.

(எ)

# "உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்"

காத்தான்குடி, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

தங்களது அரசியல் தேவைகளுக்காக, ஆட்சிகளை கொண்டு வருவதற்காக, ஆட்சிகளை உருவாக்குவதற்காக சிலர் முஸ்லிம் இளைஞர்களை திசை திருப்பி இவ்வாறு மிக மோசமான செயலை மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் முழு முஸ்லிம் சமூகமும் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, காத்தான்குடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஈஸ்டர் தாக்குலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக பிரார்த்திக்கிறோம். நாங்கள் மிகவும் மன வேதனை அடைந்தோம். இன்னமும் வேதனை அடைகிறோம்.

குண்டுத் தாக்குதலால் காத்தான்குடி பிரதேசம் அநியாயமாக பல சோதனைகளையும் சவால்களையும் சந்தித்தது என்பதை அனைவரும் அறிவீர்கள். தற்போது தான், சில உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. யார் பின்னணியில் இருந்தார்கள், யார் இதை செய்தார்கள் போன்ற உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதோடு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்- என்றார்.

(எ)

# "தமிழ் மக்கள் இனியும் ஏமாறக்கூடாது"

வவுணதீவு, ஏப். 22

கடந்த காலங்களில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது ராஜபக்ஷ குடும்பத்துடன் இணைந்து கிரிபத்து உண்டு, வெடிகொளுத்தி மகிழ்ந்து, பிள்ளையான், கருணா குழுவுடன் இணைந்து மேடைகளில் ஏறி வாக்குகேட்டு பிரசாரம் செய்தவர்கள். சின்னவத்தை விகாரையை கட்டுவதற்கு அழைப்பு விடுத்தவர்கள் இன்று தமிழ்த் தேசிய உடையை போட்டுக் கொண்டு, வெள்ளைவேட்டியுடன் மாலை போட்டு நாடகமாடி வருகின்றனர். இவர்களின் கதைக்கு ஒருபோதும் தமிழ் மக்கள் ஏமாறக்கூடாது என தமிழ்த் தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் வவுணதீவு பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஆயித்தியமலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்படுகொலை குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யப்பட வேண்டும். அதற்கான நகர்த்தல்களை செய்ய வேண்டுமாக இருந்தால் ஒரு சரியான தலைமைத்துவம் வேண்டும். அந்தக் கட்சி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே. எனவே, மக்கள் அனைவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பலப்படுத்த வேண்டும். - என்றார்.

(எ)

# மட்டக்களப்பு - பாசிக்குடா கடற்கரைக்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

மட்டக்களப்பு, ஏப். 22

கிழக்கு மாகாணத்தின் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான மட்டக்களப்பு - பாசிக்குடா கடற்கரைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதை அவதானிக்க முடிகிறது.

சித்திரைப் புத்தாண்டு மற்றும் வார விடுமுறையை முன்னிட்டு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாசிக்குடா கடற்கரையை நோக்கி படையெடுக்கின்றனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் இவ்வாறு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் பாசிக்குடா கடற்கரைக்கு வருகை தந்தனர்.



கடற்கரைக்கு குடும்பத்துடன் வரும் மக்கள் தாங்கள் மகிழ்ச்சியான முறையில் பொழுதைக் கழிக்க கடலில் நீராடுவதோடு, விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடற்கரை பகுதியில் இரண்டு மலசலகூடங்கள் மாத்திரமே காணப்படுவதால் பெருந்திரளாக கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்களுடைய இயற்கைத் தேவைகளை நிறைவேற்ற பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் வாழைச்சேனை பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனம் செலுத்தி அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருமாறு சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையே

# ஆளில்லா விமானங்கள் மூலம் ரஷ்யாமீது உக்ரைன் தாக்குதல்

மொஸ்கோ, ஏப். 22

**ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு அமுல்படுத்தப்பட்ட 30 மணி நேர தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையே ஆளில்லா விமானங்கள் மூலம் உக்ரைன் படையினர் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா குற்றஞ் சாட்டியுள்ளது.**

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான போரானது 3 ஆண்டுகளைக் கடந்து தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில், ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு, ரஷ்யா, 30 மணி நேர போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை அறிவித்திருந்தது. இதன்படி, தாக்குதலுக்கு தற்காலிகத் தடை விதித்திருந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையே நேற்று முன்தினம் இரவு 48 ஆளில்லா விமானங்கள் மூலம் உக்ரைன் தாக்குதல் நடத்தியது என ரஷ்ய வெளிவிவகார அமைச்சு நேற்றுக்காலை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதுபற்றி வெளியான எக்ஸ் பதிவில், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிடும் போது, கிரீமியா பகுதி உட்பட ரஷ்ய நிலைகளை இலக்காகக் கொண்டு துப்பாக்கிகள் மற்றும் சிறிய ரக பீரங்கிகளால் 444 முறை உக்ரைன் படைகள் தாக்கின எனத் தெரிவித்துள்ளது.

ரஷ்ய கூட்டமைப்பின் ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியின் உத்தரவின்படி, சிறப்பு இராணுவச் செயல் மண்டலத்தில் குவிக்கப்பட்டுள்ள அனைத்துப் படைக் குழுவினரும், ஏப்ரல் 19ஆம் திகதி மாலை 06.00 மணியிலிருந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்தச் சூழலில், எல்லைப் பகுதிகளான பிரையான்ஸ்க், குர்ஸ்க் மற்றும் பெல்கராட் உள்ளிட்ட மண்டலங்களில் எதிரிப் படையினர் தாக்குதல்களை நடத்தினர். இதில், பொது மக்களில் பலர் பலியாகினர். பலர் காயமும் அடைந்துள்ளனர் என்று ரஷ்ய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், எத்தனை பேர் பாதிப்புக்கு ஆளானார்கள் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

ஈஸ்டரை முன்னிட்டு 30 மணிநேர போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையே, ரஷ்ய படையினர் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளனர் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், ரஷ்யாவும் பதிலுக்கு குற்றஞ்சாட்டியுள்ளது.

இரு நாடுகள் இடையே 2022ஆம் ஆண்டு போர் தொடங்கியதிலிருந்து 2ஆவது முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்த முயற்சி இதுவாகும். 2023ஆம் ஆண்டு ஜனவரியில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அது தோல்வியில் முடிந்தது.

# போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை!

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



டெல் அவிவ், ஏப். 22

போரிட்டால்தான், இஸ்ரேலுக்கு ஹமாஸ் படையினரால் அச்சுறுத்தல் இருக்காது. போரைத் தவிர இஸ்ரேலுக்கு வேறு வழியில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

இஸ்ரேல் - காஸா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. பணயக் கைதிகளை மீட்கவும் ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்தப் போரில் பலஸ்தீனத்தை சேர்ந்த அப்பாவி பொது மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வரும் போரால் காஸாவில் இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 51 ஆயிரமாக அதிகரித்துள்ளது. காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் கடந்த 3 நாட்களில் மட்டும் 100 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் கூறுகையில், காஸாவில் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஹமாஸ் அழிக்கப்பட்டு, பணயக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படும் வரை போரை முடிவுக்குக் கொண்டுவர இயலாது. அவ்வாறு போரிட்டால்தான், இஸ்ரேலுக்கு ஹமாஸ் படையினரால் அச்சுறுத்தல் இருக்காது. போரைத்தவிர இஸ்ரேலுக்கு வேறு வழியில்லை என்று தெரிவித்தார். (எ)

# ஆபிரிக்காவில் சிறை கலவரம் 130 கைதிகள் தப்பியோட்டம்

ஜாமெனா, ஏப். 22

ஆபிரிக்காவில் சிறைச்சாலை நிர்வாகத்தைக் கண்டித்து கைதிகள் நடத்திய போராட்டத்தில் கலவரம் வெடித்தது. இந்த நிலையில், 130 கைதிகள் தப்பியோடினர்.

மத்திய ஆபிரிக்க நாடான சாட்டில் உள்ள மோங்கோ என்ற நகரத்தில் அமைந்திருக்கும் சிறைச்சாலையில் சுமார் 500 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தங்களுக்கு போதிய உணவு வழங்கப்படுவதில்லை என கைதிகள் குற்றஞ் சாட்டி வந்தனர். ஆனால், அதிகாரிகள் அதனைக் கண்டு கொள்ளவில்லை.

இந்த நிலையில் குவேரா மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் மோங்கோ சிறைச்சாலையை பார்வையிடச் சென்றிருந்தார். அப்போது, சிறை நிர்வாகத்தைக் கண்டித்து கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த சமயத்தில் சில கைதிகள் காவலர்களின் அறைக்குள் நுழைந்தனர்.

பின்னர் அங்கிருந்த துப்பாக்கியை எடுத்து சுட ஆரம்பித்தனர். இதனால், அங்கு கலவரம் வெடித்தது. இந்தக் கலவரத்தில் 3 பேர் பலியாகினர். ஆளுநர் உட்பட பலருக்கு படுகாயம் ஏற்பட்டது. இந்த நெருக்கடியான சூழலைப் பயன்படுத்தி 130இற்கும் மேற்பட்ட கைதிகள் அங்கிருந்து தப்பியோடினர். இதனால், அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. (எ)

# அமெரிக்காவில் விமான விபத்து நான்கு பேர் பலி

வாஷிங்டன், ஏப்.22

அமெரிக்காவில் விமான விபத்தில் சிக்கிய நான்கு பேர் பலியாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணம் மெனோமொனி நகரிலிருந்து இல்லியான்ஸ் மாகாணத்துக்கு சிசா 180 என்ற சிறிய ரக விமானம் நேற்று முன்தினம் காலை புறப்பட்டது. அந்த விமானத்தில் 2 பெண்கள் உட்பட 4 பேர் பயணித்தனர்.

இல்லியான்ஸ் மாகாணத்தின் டிரில்லா நகரில் விமானம் தரையிறங்க தாழ்வாக பறந்தது. அப்போது, எதிர்பாராத விதமாக வீதியோரம் அமைக்கப்பட்டிருந்த மின் கம்பி மீது விமானம் உரசியது. இதையடுத்து கட்டுப்பாட்டையிழந்த விமானம் வெடித்து சிதறியது. இந்தக் கோர விபத்தில் விமானத்தில் பயணித்த 4 பேரும் உயிரிழந்தனர். (எ)

# ஷேக் ஹசீனாவை கைது செய்ய இன்டர்போலிடம் உதவி கோரல்



டாக்கா, ஏப். 22

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ஷேக் ஹசீனாவுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்க வலியுறுத்தி இன்டர்போலுக்கு பங்களாதேஷ் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேஷில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரலாறு காணாத வன்முறை ஏற்பட்டது. இந்த வன்முறையைத் தொடர்ந்து ஷேக் ஹசீனா தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்து விட்டு, இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து முகமது யூனுஸ்தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது.

ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலை மற்றும் ஊழல் வழக்கு பங்களாதேஷில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அவரை பங்களாதேஷுக்கு திருப்பி அனுப்பும்படி அந்த நாட்டு அதிகாரிகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனினும், ஷேக் ஹசீனாவை நாடு கடத்தும் கோரிக்கையை இந்திய மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை.

இந்த நிலையில், இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ஷேக் ஹசீனாவுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்க வலியுறுத்தி இன்டர்போலுக்கு பங்களாதேஷ் கோரிக்கை விடுத்துள்ளது. ஷேக் ஹசீனா மட்டுமின்றி மேலும் 12 பேருக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# மியன்மாரில் நிலநடுக்கம்

நய்பிடாவ், ஏப்.22

மியன்மாரில் நேற்று அதிகாலை 02.47 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.8 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால், ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்த வித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக நேற்று முன்தினம் நள்ளிரவு 11.04 மணியளவில் 3.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. மியன்மாரில் கடந்த மாதம் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தால் 2700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# 10ஜி இணைய சேவையை அறிமுகப்படுத்தியது சீனா

பீஜிங், ஏப். 22

10 ஜி இணைய சேவையை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியில் சீனா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது. பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை அந்த நாடு உலகுக்கு அறிமுகப்படுத்தி வருகிறது.

அந்த வகையில், உலகின் முதல் 10 ஜி இணைய சேவையை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த நாட்டின் ஹூபே மாகாணம் சுனன் நகரில் 10 ஜி சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

10 ஜி மூலம் மின்னல் வேக இணைய வசதி பெற முடியும்.

10 ஜி சேவை நாட்டின் பிற பகுதிகளுக்கும் விரைவில் விரிவுபடுத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் ஹூவாய் நிறுவனம் மற்றும் சீன யுனிகான் ஆகிய நிறுவனங்கள் இணைந்து 10 ஜி இணைய சேவையை அறிமுகப்படுத்தியுள்ளன.

# காஷ்மீரில் திடீர் வெள்ளம்: நிலச்சரிவால் மூவர் மரணம்

புதுடில்லி, ஏப். 22

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் ரம்பான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட மேகவெடிப்பால் பலத்த மழை பெய்தது. இதனால், பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது. அத்துடன் நிலச்சரிவும் ஏற்பட்டது. செரி பக்னா கிராமத்தில் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

இதில், மூவர் உயிரிழந்தனர். பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மீட்புப் படையினர் விரைந்து சென்றனர். மேலும், தரம் குந்த் கிராமத்தில் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கியிருந்த 100 இற்கும் மேற்பட்டோரை மீட்டனர்.



இந்தப் பகுதியிலும் பல வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

நூற்றுக்கணக்கான வாகனங்கள் நெடுஞ்சாலையில் சிக்கியுள்ளன. மழை நிற்கும் வரையில் யாரும் வெளியில் வரவேண்டாம் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் சொதப்பியது சென்னை

# 9 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அசத்தல் வெற்றி!

மும்பை, ஏப். 22

சென்னை அணிக்கு எதிரான போட்டியில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அசத்தல் வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரச்சின் ரவீந்திரா - ஷேக் ரஷீத் களமிறங்கினர். இதில் ரச்சின் ரவீந்திரா 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்து வந்த அறிமுக வீரரான ஆயுஷ் மாத்ரே ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினார். அவர் வெறும் 15 பந்துகளில் 32 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே ஷேக் ரசீத் 19 ஓட்டங்களில் வெளியேறினார். அந்த சமயத்தில் சென்னை அணி 63 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான சூழலில் கை கோர்த்த ஜடேஜா - ஷிவம் துபே சிறப்பாக இணைப்பாட்டம் அமைத்து அணியை முன்னெடுத்து சென்றனர். முதலில் நிதானமாக விளையாடிய இந்த ஜோடி ஒரு கட்டத்துக்கு மேல் அதிரடியில் இறங்கியது. 79 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் ஷிவம் துபே 50 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த எம். எஸ். டோனி 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இருப்பினும் ஜடேஜா இறுதி வரை களத்திலிருந்து சென்னை அணி சவாலான இலக்கை எட்ட உதவினார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சென்னை அணி 5 விக்கெட்களை இழந்து 176 ஓட்டங்கள் எடுத்தது. ஜடேஜா 53 ஓட்டங்களுடனும், ஓவர்டன் 4 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். மும்பை தரப்பில் அதிகபட்சமாக ஜஸ்பிரீத் பும்ரா 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 177 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி மும்பை அணி களமிறங்கியது. அணியின் தொடக்க வீரர்களாக ரயான் ரிக்கெல்டன் - ரோஹித் சர்மா ஆகியோர் களமிறங்கினர். நிதானமாக



ஆடிய ரயான் ரிக்கெல்டன், 19 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து சூர்யகுமார் யாதவுடன், ரோஹித் சர்மா ஜோடி சேர்ந்தார். இவர்கள் இருவரும் சென்னை அணியின் பந்துவீச்சை நாலாபக்கமும் சிதறடித்தனர். அஸ்வின் வீசிய 12ஆவது ஓவரில் ரோஹித் சர்மா(33 பந்துகள் - 50 ஓட்டங்கள்) இந்த சீசனில் தனது முதல் அரைச்சதத்தை பதிவு செய்தார். மறுபுறம் தனது பங்கிற்கு அதிரடி காட்டிய சூர்யகுமார் யாதவ், 15ஆவது ஓவரில் அரைச்சதம் கடந்தார்.

இறுதியில் மும்பை அணி 15.4 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டுமே இழந்து 177 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம் மும்பை அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ரோஹித் சர்மா (76 ஓட்டங்கள் - 4 பௌண்ட்ரிகள், 6 சிக்ஸர்கள்), மற்றும் சூர்யகுமார் யாதவ் (68 ஓட்டங்கள் - 6 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்கள்) இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். சென்னை அணியில் ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். (எ)




## சுப்மன் கில்லுக்கு அபராதம் விதிப்பு

அகமதாபாத், ஏப். 22

குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில்லுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டில்லி - குஜராத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில், குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காத காரணத்தால் சுப்மன் கில்லுக்கு போட்டி கட்டணத்தில் இலங்கை மதிப்பில் 42 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)

## "நாங்கள் சரியான நேரத்தில் வெற்றிகளை பெறுகிறோம்"




மும்பை, ஏப். 22


நாங்கள் சரியான நேரத்தில் வெற்றிகளை பெற்று வருகிறோம் என்று ரோஹித் சர்மா தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் மும்பை அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் ரோஹித் சர்மா 76 ஓட்டங்கள் எடுத்தார். ஆட்டநாயகன் விருது ரோஹித் சர்மாவுக்கு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் ரோஹித் சர்மா அளித்த பேட்டியில் கூறியதாவது, சில சி. எஸ். கே. ரசிகர்கள் நான் விளையாடும் விதத்தை பார்த்து எனக்கு உற்சாகம் அளித்தனர். அவர்கள் கிரிக்கெட்டை ரசிக்கக் கூடிய ரசிகர்கள். அது தான் இந்த வான்கடே மைதானத்தின் சிறப்பம்சமாகும். எனது துடுப்பாட்டத்தை பொருத்தவரை எனக்கு எளிய விஷயங்களை செய்வதும் தெளிவான மனநிலையில் இருப்பதும் மிகவும் முக்கியம்.

நாம் எப்படி விளையாட வேண்டும், இன்னிங்ஸ் எப்படி கட்டமைக்க வேண்டும் என்பதுதான் போட்டியில் கவனிக்க வேண்டிய விஷயமாகும். கடைசி இரண்டு அல்லது மூன்று ஓவர்களில் இம்பேக்ட் பிளேயராக வருவது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. 17 ஓவர்கள் களத்தில் இல்லாத போது அப்படி வருவது எளிதான விஷயம் கிடையாது. ஆனால், நான் உடனே துடுப்பாட்டம் செய்ய வேண்டும் என்று எனது அணி விரும்பினால் அது குறித்து எனக்கு கவலை இல்லை.

என்னை பொருத்தவரை கடைசி வரை இருந்து போட்டியை வெற்றிகரமாக முடிப்பதே எனக்கு முக்கியம். அதுவே எனக்கு திருப்தி தரக் கூடிய விஷயமாக இருக்கிறது. நாங்கள் இப்போது சரியான நேரத்தில் வெற்றிகளைப் பெற்று வருகிறோம். தொடர்ச்சியாக மூன்று ஆட்டங்களில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம். - என்றார். (எ)




## பார்சிலோனா ஓபின் ரென்னிஸ்: சம்பியனானார் ஹோல்கர் ரூனே

பார்சிலோனா, ஏப். 22

பார்சிலோனா ஓபின் ரென்னிஸ் தொடரில் ஹோல்கர் ரூனே சம்பியன் பட்டம் வென்றார்.

பார்சிலோனா சர்வதேச ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருப்பவரும் 2 முறை சம்பியனுமான கார்லஸ் அல்காரஸ், 13ஆம் நிலை வீரரான ஹோல்கர் ரூனேவை சந்தித்தார்.

ஒரு மணி 40 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் ஹோல்கர் ரூனே 7-6 (8-6), 6-2 என்ற நேர் செட்டில் அல்காரஸுக்கு அதிர்ச்சி அளித்து கிண்ணத்தை சுவீகரித்தார். அவருக்கு இது 5ஆவது சர்வதேச பட்டம். அதே சமயம் 500 தரவரிசை புள்ளிகளை வழங்கும் இத்தகைய போட்டியில் ரூனே மகுடம் சூடுவது இதுவே முதல் முறையாகும்.

அவருக்கு இலங்கை மதிப்பில் 18 கோடி ரூபாயும், 2ஆவது இடம்பிடித்த அல்காரஸுக்கு 10 கோடி ரூபாயும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. (எ)

## சி. எஸ். கே. அணிக்காக ஆயுஷ் மாத்ரே சாதனை

மும்பை, ஏப். 22

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் சி. எஸ். கே. அணிக்காக ஆயுஷ் மாத்ரே மாபெரும் சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் மும்பையில் நடைபெற்ற போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. இதில், சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த போட்டியில் ராகுல் திரிபாதிக்கு பதிலாக 17 வயது இளம் வீரர் ஆயுஷ் மாத்ரே அணியில் சேர்க்கப்பட்டார்.

இதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் சென்னை அணிக்காக குறைந்த வயதில் அறிமுகமான வீரர் என்ற மாபெரும் சாதனையை ஆயுஷ் மாத்ரே படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. ஆயுஷ் மாத்ரே - 17 வயது 278 நாட்கள்,
2. அபினவ் முகுந்த் - 18 வயது 139 நாட்கள்,
3. அங்கித் ராஜ்புட் - 19 வயது 123 நாட்கள்,
4. மதீஷ பத்திரன - 19 வயது 148 நாட்கள்,
5. நூர் அகமது - 20 வயது 79 நாட்கள்.

முதல் போட்டியிலேயே அதிரடியாக விளையாடிய ஆயுஷ் மாத்ரே வெறும் 15 பந்துகளில் 32 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மரியன்னை...

பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரார்த்தனைகள் நிகழ்த்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் பொதுச் சுடர், மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்குத் தந்தைகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இந்த நினைவேந்தலின்போது தேவாலயத்தை சூழவுள்ள பகுதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். (அ)

## பயங்கரவாத...

பயன்படுத்துவதை இடைநிறுத்திவைப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஆராய்ந்துள்ளனர்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைக்காக ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள நிபந்தனைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அநுரகுமார திஸநாயக்க அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வேண்டுகோளை அரசாங்கம் ஏற்குமா என்ற கேள்விக்கு இது குறித்து இன்னமும் ஆராயவில்லை என நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவோம் என அவர் கூறியுள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தையா அரசாங்கம் புதிய சட்டமாக அறிவிக்கும் என்ற கேள்விக்கு நாங்கள் அதற்கு இன்னமும் பெயர் சூட்டவில்லை. குழுவொன்று இது குறித்து ஆராய்கின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ)

## திருத்தந்தை...

"நற்செய்தியின் மதிப்புகளை விசுவாசத்துடனும், தைரியத்துடனும், உலகளாவிய அன்புடனும், குறிப்பாக ஏழைகள் மற்றும் மிகவும் ஒதுக்கப்பட்டவர்களிடம் வாழ அவர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

"கர்த்தராகிய இயேசுவின் உண்மையான சீடராக அவரது முன்மாதிரிக்கு மிகுந்த நன்றியுடன், திருத்தந்தை பிரான்சிஸின் ஆன்மாவை, ஒருவருமான கடவுளின் எல்லையற்ற, இரக்கமுள்ள அன்பிற்கு நாங்கள் சமர்ப்பிக்கிறோம்," என்று பெரெல் மேலும் தெரிவித்துள்ளார்.

ரோமன் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் முதல் லத்தீன் அமெரிக்க திருத்தந்தை என்ற பெருமையை திருத்தந்தை பிரான்சிஸ் பெற்றுள்ளார்.

பல்வேறு உடல்நலப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ், 38 நாட்கள் வைத்தியசாலையில் தொடர் சிகிச்சையில் இருந்தார். உடல் நலம் சற்று தேறிய நிலையில் மார்ச் 23 ஆம் மீண்டும் வத்திக்கான் திரும்பினார்.

வழக்கமான பணிகளை பார்க்கவும் தொடங்கினார். நேற்று முன் தினம் ஈஸ்டரை முன்னிட்டு கத்தோலிக்கர்களுக்கு ஆசியும் வழங்கியிருந்தார்.

இந்நிலையில், நேற்று காலை அவர் காலமானதாக வத்திக்கான் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆர்ஜென்ரீனா தலைநகர் புவனஸ் அயஸ் நகரில் 1936ஆம் ஆண்டு டிசெம்பர் 17ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் பிறந்தார்.

1969ஆம் ஆண்டு கத்தோலிக்க குருவாக பணியில் சேர்ந்தார். பல்வேறு பதவிகளை பெற்ற இவர் 2001ஆம் ஆண்டில் கர்தினாலாக பதவி உயர்த்தப்பட்டார்.

2013ஆம் ஆண்டு திருத்தந்தையாக இருந்த 16 ஆம் பெனடிக்ட் ராஜினாமா செய்தமையைத் தொடர்ந்து, புதிய திருத்தந்தையாக பிரான்சிஸ் 2013 மார்ச் 13 இல் தேர்வு செய்யப்பட்டார். (அ)

## மைத்திரிபால...

வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார். (அ)

## முன்னாள்...

தசநாயக்க தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக வாக்கு மூலம் பெறுவதற்காக இந்த அழைப்பாணை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

## சர்ச்சைக்குரிய...

ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த கடிதம் அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதியின் அறிக்கை உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தின் பிரிவுகள் 92 சி (தவறான செல்வாக்கு) மற்றும் 82 டி (அதிகபட்ச நன்மைக்கான வாக்குறுதிகள்) ஆகியவற்றின் தெளிவான மீறலாகும் என்று கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கந்தளாய் மற்றும் மன்னாரில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களில் உரையாற்றிய ஜனாதிபதி, தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தனது கையை நீட்டி நிதி வழங்குவதாக அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஈஸ்டர் ஞாயிறு...

பொதுமக்களுக்கு அதனை பகிரங்கப்படுத்தவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் வழக்குகளைக் கண்காணிப்பதற்கு சுயாதீன வழக்குரைஞர் அலுவலகத்தை ஏற்படுத்தவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைத்து சக்திகளையும் அடையாளம் காணவேண்டும், உண்மையை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்கள் அவர்கள் எந்த பதவியிலிருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும்.

2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதியிடப்பட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

சஹ்ரான் ஹாசிமிற்கும் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்,முக்கிய சாட்சியான ஆசாத் மௌலானா தெரிவித்த விடயங்கள் உட்பட சனல் 4 இன் ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சதித்திட்டத்துக்கு காரணமான துணை இராணுவக் குழு கட்டமைப்புகளை செயல் இழக்கச் செய்வதற்காக புதிய சட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

ஆட்சியில் உள்ளவர்கள் மக்களை ஆள்வதை விட மக்களுக்கு சேவையாற்றுவதை உறுதி செய்யும் புதிய கலாசாரத்தை ஏற்படுத்தவேண்டும் -என்றார். (அ)

## பொருளாதார...

முன்னதாகவே இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளது. பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்து செல்லும் நிலையில், இலங்கை பின்னோக்கிச் செல்கிறது. நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இந்த தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று தேசிய மக்கள் சக்தி எண்ணினால் அவ்வாறு வெற்றி பெறமுடியாது. பெரும்பாலான இடங்களில் பெரும்பான்மை இருப்பதாக பலர் எண்ணுகின்றனர்.

நாம் அவற்றை ஒன்றிணைத்து வெற்றி பெறவே எதிர்பார்க்கிறோம். நாம் மாத்திரமல்ல. ஏனைய குழுக்களும் ஒன்றாக இணைந்துள்ளன. ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணையும்போது அதிகளவான உறுப்பினர்களைக் கொண்ட தரப்பிலிருந்தே பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். அவ்வாறெனில், அதிக உறுப்பினர்களைப் பெற நாம் பாடுபட வேண்டும் அவ்வாறு பெற்றால் ஏனையோரை தங்கியிருக்க வேண்டியேற்படாது. தற்போதிருப்பது மிகப்பலமான ஜனநாயக அரசாங்கம் என்று கூறிக் கொண்டிருக்கின்றனர். தாம் கடிதம் அனுப்பியதால்தான் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரி அறிவீட்டை 3 மாதங்களுக்கு ஒத்தி வைத்துள்ளதாகக் கூறுகின்றனர். இவ்வாறான பொய்களுக்கு இனியும் ஏமாறக்கூடாது. பாராளுமன்ற தேர்தலிலும் தமக்கு ஒரு வாய்ப்பை வழங்குமாறு கோரினர்.

மக்கள் அதனையும் வழங்கினர். ஆனால், இன்று என்ன நடந்திருக்கிறது? ஊழல் ஒழிப்பு சட்டம் குறித்த நீதிமன்ற விசாரணைகள் இடம்பெறும் போது அது குறித்து பேச முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால் அவ்வாறு எந்தவோர் ஏற்பாடும் அதில் இல்லை. அவர் அந்த சட்டத்தை முழுமையாக படிக்கவில்லை என்பது இதிலிருந்தே தெளிவாகிறது. இதனை கடந்த டிசெம்பரில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், தேர்தல்கள் மற்றும் ஆட்சி மாற்றத்தால் அதனைச் செய்ய முடியாது போனது.

இந்த அரசாங்கம் இது தொடர்பில் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. ஆனால் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாம் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதால் தான் இன்று சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடியதாகவுள்ளது. எனினும் அதனை அரசியல் தலையீடின்றி மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எம்மால் தான் இவர்களால் இதனை செய்ய முடிந்துள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஆனாலும் இந்த அரசாங்கத்தால் ஊழலை முற்றாக ஒழிக்க முடியவில்லை. மாறாக 300 கொள்கலன்களை காணாமலாக்கவே முடிந்தது. நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் கடன் பிரச்னைக்கு தீர்வினை வழங்கினோம். எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய 80 பில்லியனில் 3 பில்லியன் இரத்து செய்யப்பட்டது. 25 பில்லியன் 20 ஆண்டுகள் கால அவகாசம் நீடிக்கப்பட்டது.

அதற்கமைய 28 பில்லியனுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. 2028 இலிருந்து கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. அன்று 6 பில்லியனாக காணப்பட்ட இருப்பு தற்போது 6.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2024இல் தேசிய உற்பத்தி வருமானம் 5 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனால், உலக வங்கியின் அறிக்கைக்கு அமைய இது 3.5 சதவீதமாக வீழச்சியடைந்துள்ளது. ட்ரம்ப்பின் வரி பிரச்னைக்கு முன்னதாகவே இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளது -என்றார். (அ)

## தேசபந்துவை...

கோரிக்கையைத் தொடர்ந்து நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மாத்தறை நீதிவான் நீதிமன்றால் கடந்த 10 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். அப்போது, அவரின் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி, தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறும்போது அவருக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றத்திடம் கோரினார்.

எனினும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாக முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம் திலீப பீரிஸ், இந்தக் கோரிக்கையை கடுமையாக எதிர்த்தார்.

இதன்போது, மாத்தறை நீதிவான் அருண புத்ததாச, நீதிமன்றத்திற்கு வரும் அனைவருக்கும் நாட்டின் பொதுச் சட்டம் பொருந்தும். பொலிஸ்மா அதிபருக்கு விசேட பாதுகாப்பு வழங்குவது சாத்தியமில்லை - என்றார்.

எனினும், நீதிமன்ற உத்தரவுகளை மீறிச் சந்தேக நபரான பொலிஸ்மா அதிபர், மாத்தறை நீதிவான் நீதிமன்றத்திலிருந்து மகிழுந்தில் வெளியேறியதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிக்கை அளித்தது.

இதன்படி, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட 2 சந்தேக நபர்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

## சிங்கள...

அரசுக் கட்சியின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.

நேற்று திங்கட்கிழமை யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகவுள்ள நிலையில் 6ஆம் திகதி தேர்தலும் நடைபெறும் எனவும் எதிர்பார்க்கின்றோம். இதேநேரம் உளளூராட்சி என்பது உள்ளூருக்கான அதிகாரங்களை கொண்டது. அது அபிவிருத்தியையும் வலுவான சமூகக் கட்டமைப்பின் பின்னணியையும் கொண்டது.

ஒவ்வொரு உள்ளூராட்சியும் அந்தந்த பிரதேசங்களை கொண்ட பிரதிநிதிகளை குதிப்பாக தமிழர்பூர்வீக கட்சிகளை கொண்ட பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது அவசியம். தமிழ் அரசுக் கட்சி இம்முறை வடக்கு, கிழக்கில் 58 சபைகளில் போட்டியிடுகிறது. இந்த சபைகளுக்கு நாம் சிறப்பான வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். ஊழல் இல்லாத சபைகளுக்கே நிதி என ஜனாதிபதி கூறுவதை ஏற்கமுடியாது. கடந்த காலத்தில் வடக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட நிதியில் எந்த நிதி திருப்பி அனுப்பப்பட்டது என்பதை எவராவது நிரூபியுங்கள்.

இதை நான், நிதி திருப்பி அனுப்பப்பட்டது எனக் கூறும் தரப்பினருக்கு சவாலாகவும் விடுகிறேன். தேசிய மக்கள் சக்தியும் இம்முறை வடக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போடியிடுகிறது. ஆனால், எவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக - சுதந்திரமாக செயல்பட முடியாதிருக்கிறார்களோ அதே போன்றவர்களாகவே இவர்களும் தென்னிலங்கையின் நிகழ்ச்சிநிரலை நிறைவுசெய்யும் ஏவுகருவிகளாகவே இருப்பர்.

குறிப்பாக சுயாதீனமாக செயல்பட ஜே. வி. பி. கட்சியின் கொள்கை நிலைப்பாடும் இடம்கொடுக்காது. அதேநேரம் கடந்த தேர்தல்களில் சொன்னது எதனையும் இதுவரை செய்யாதவர்கள் இனி செய்வார்களா? அநுர தரப்பு அரச ஆதரவு சக்திகள் சுயேச்சையாகவும் நேரடியாகவும் எமது மக்களை ஏமாற்றி வாக்குகளை அபகரித்து குறிப்பாக, டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் ஆகியோரின் வாக்குகளை அபகரித்தே வெற்றி பெற்றுள்ளனர். அந்தவகையில் சிங்கள மேலாதிக்கம் இனி வடக்கில் எடுபடக்கூடாது. அதற்கு மக்கள் தெளிவுடன் செயல்படுவது அவசியம். - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சபைக்கு வந்த 'எல் போர்ட்'காரர்கள் வாகனத்தை சேதப்படுத்திவிட்டனர்!

### முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விமர்சனம்

கொழும்பு, ஏப். 22

'பாராளுமன்றத் தேர்தலின்போது 'எல் போர்ட்' காரர்களை தெரிவு செய்ய வேண்டாம் எனவும் அனுபவம்மிக்கவர்களை சபைக்கு அனுப்புமாறு கோரினேன். எனினும், 'எல் போர்ட்'காரர்கள் சபைக்கு வந்தனர். இன்று வாகனத்தைச் சேதப்படுத்தி விட்டனர். வாகனத்தில் எடுப்பதற்கு ஒன்றும் இல்லை."

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கப் போவதில்லை. எனவே, பெரும்பான்மையை பெறுவதற்கு எதிரணிகள் ஒன்றுபடவேண்டும். பெரும்பான்மை பலம் இருந்தால்தான் சபைத் தலைவரை தெரிவுசெய்ய முடியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.



எனவே, நாம் எவருடனும் மோத தேவையில்லை. பெரும்பான்மையை பெறுவதற்கு முயற்சிப்போம் - எனவும் ரணில் கூறினார். (அ)

## ஜனாதிபதியின் செயல் வெறும் கண்துடைப்பு!

### எதிர்க்கட்சி விமர்சனம்

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சி.ஐ.டியிடம் ஒப்படைப்பது ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சி.ஐ.டியிடம் ஒரு பொது ஆவணத்தை ஒப்படைப்பதால் எந்த நன்மையும் ஏற்படாது என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, இந்த அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ சட்டமா அதிபரிடம் ஒப்படைத்தார். அதிலிருந்து எதுவும் வெளிவரவில்லை.

அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதை ஆயர் மாநாட்டிடம் ஒப்படைத்தார். எனவே ஜனாதிபதி திஸாநாயக்கவின் செயல் வெறும் கண்துடைப்பு என்று அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டதில் முரண்பாடான கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டதாக ஒரு அமைச்சர் கூறியுள்ளார்.

இருப்பினும், பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் கடத்தப்பட்ட வழக்கில் சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டார் என அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி கூறியுள்ளார். எனவே ஏன் இந்த முரண்பாடுகள் என்றும் காவிந்த கேள்வி எழுப்பினார். (அ)

## பாப்பரசர் பிரான்சிஸ் மறைவுக்கு ஜனாதிபதி அநுரகுமார இரங்கல்!

கொழும்பு, ஏப். 22

பாப்பரசர் பிரான்சிஸ் மறைவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில் பதிவிட்ட ஜனாதிபதி,வணக்கத்திற்குரிய பாப்பரசர் பிரான்சிஸ் மறைவுக்கு இலங்கை மக்கள் சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

அமைதி, இரக்கம் மற்றும் மனித நேயம் மீதான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு உலகில் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் கருணை, நீதி மற்றும் மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் ஆகியவற்றின் அவரது மரபு எதிர்காலச் சந்ததியினருக்கு ஊக்கமளிக்கும் என்று ஜனாதிபதி அநுர மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## பளை குடிதண்ணீர் விநியோக திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழு பார்வை

கொழும்பு, ஏப். 22

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பளை நீர் விநியோகத் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழுவினர், குடிதண்ணீர் விநியோக

நடவடிக்கையை பார்வையிட்டதுடன் பொது மக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

ஆசிய வங்கி பிரதிநிதிகளுடன், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளும் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

பளை பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படும் நீர், குடிப்பதற்கு பொருத்தமற்றதாக உள்ள நிலையில், வறட்சியான காலத்தில், மக்களுக்கு குடிதண்ணீர் உட்பட நீர்த்தேவைகளுக்கும் நெருக்கடி ஏற்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# ஜனாதிபதி வெளிக்கொணர்வதாகக் கூறிய ஈஸ்டர் தாக்குதல் பிரதான சூத்திரதாரி யார்?

### எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி




கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி யார் என்பது தொடர்பிலான தகவல்களை இன்றைய தினம் (நேற்று) விசேட அறிவிப்பின் மூலம் வெளிக்கொணர்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்புடைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை மாத்திரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சாக்குப்போக்குகளை கூறிய இந்த அரசாங்கம், இன்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சாக்குப்போக்குகளை கூறி மக்களை ஏமாற்றி வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

33 வீதத்தால் மின் கட்டணத்தை குறைப்போம் என வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்த பிற்பாடு இன்னும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என்றனர். இதனால் பொதுமக்கள் கொந்தளித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை நாடிய போது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 20ூ ஆல் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது. இந்த மின்சார கட்டண குறைப்பை அரசாங்கமோ ஜனாதிபதியோ எடுக்கவில்லை. எஞ்சியுள்ள 13 வீத குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்க வேண்டும்.

இந்த பொய், திருட்டு, ஏமாற்றுதல் போன்றவற்றால் தொடர்ந்தும் நாம் ஏமாறுவதா இல்லையா என்பதை இந்நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். ஆளுந்தரப்பினர் பழைய பொய்களோடு புதிய பொய்களையும் முன்வைத்து வருகின்றனர். வரவுசெலவுத் திட்டத்தில் கூட இல்லாத சலுகைகளை வழங்குவதாக பொய் சொல்கிறார்கள்.

திசைகாட்டி அதிகாரங்களை கைப்பற்றாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படமாட்டாது என ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறி பகிரங்கமாக கூறிவருகின்றார். உள்ளூராட்சி சட்டங்கள் குறித்து போதிய விளக்கம் ஜனாதிபதிக்கு இல்லை. அதனாலயே இவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறார். உள்ளூராட்சி மன்ற சட்டம் மிகவும் வலுவான சட்டமாகும். இதனை ஜனாதிபதி சரியாக வாசிக்காமல் முட்டாள்தனமாக பேசி வருகிறார்-என்றார். (அ)

## அமெரிக்க வர்த்தக பிரதிநிதியுடன் இன்று இலங்கை அதிகாரிகள் பேச்சு!

கொழும்பு, ஏப். 22

இலங்கை தூதுக்குழு இன்று செவ்வாய்க்கிழமை அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜேமிசன் கிரீரை சந்திக்க உள்ளதாக பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் அறிவித்த வரி குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே இந்த சந்திப்பு முன்னெடுக்கப் படவுள்ளது.

அமெரிக்க வர்த்தக பிரதிநிதியுடனான கடிதப் பரிமாற்றத்தின் விளைவாக இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் அனில் ஜெயந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார்.இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் இலங்கைக் குழுவில் வெளிவிவகார அமைச்சு, வர்த்தக அமைச்சு மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகள் உள்ளனர்.

இதற்கிடையில், 2028 ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்தும் உறுதிமொழிகளை பூர்த்தி செய்ய இலங்கை போதுமான வெளிநாட்டு இருப்புக்களை உருவாக்க அமெரிக்காவுடன் கட்டண விகிதங்களை மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க கூறினார்.

அமெரிக்க வரிகள் குறித்து ஆய்வு செய்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினரான மங்கள விஜேசிங்க, இலங்கையின் நாணய நிதியத் திட்டம் மற்றும் கடன் செலுத்துதல்களின் அடிப்படையில் மேல்முறையீடு செய்வதைத் தவிர, இலங்கைக்கான அமெரிக்க இறக்குமதியை அதிகரிப்பது விவாதப் பொருளாக இருக்கும் என்று மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர கட்டணங்களை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக, அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்துடன் இலங்கை ஏற்கனவே இரண்டு சுற்று மெய்நிகர் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. (அ)

## 167 பேரின் பெயர் நம்பிக்கையின் சாட்சிகள் பட்டியலில் இணைப்பு!

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்த 167 கத்தோலிக்க விசுவாசிகளின் பெயர்கள் நம்பிக்கையின் சாட்சிகள் என்ற அதிகாரபூர்வ புத்தக அகராதியில் சாட்சியாக இணைக்கப்பட்டுள்ளதாக பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்று கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனை நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

திருத்தந்தையின் திருப்பீடமான வத்திக்கானில் இயங்கும் இறைமக்களை தூயவர்களாக வழிகாட்டும் திருத்துறை நம்பிக்கையின் சாட்சிகள் அடங்கிய அகராதியில் பெயர்களை பதிவு செய்யும் அதிகாரபூர்வ அறிவிப்புக்கான பிரகடனத்தை வாசித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.